(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 94.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 செப்தெம்பர் 05 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

56/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் போது போட்டிகளில் ஆட்டநிர்ணய சூதாட்ட சதியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனின், இது பற்றி அமைச்சினால் விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனின், மேற்படி விசாரணையின் தகவல்களை சமர்ப்பிப்பாரா;

(iv) இப்போட்டிகளில் ஆட்டநிர்ணய சூதாட்ட சதியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

104/ '18

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வேலைவாய்ப்புகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்ற ஊழியர்களில் உரிய சேவைக் காலத்தை நிறைவு செய்த பின்னர் நாடு திரும்பாத ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இம்முறைப்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) விசாரணை நடத்தப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நாடு திரும்பாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டறியப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அக்காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) நாடு திரும்பாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டறியப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) நாடு திரும்பாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டறியப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

162/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வாகனத்தினதும் இலக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாகனமும் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவு யாதென்பதையும்;

(iv) நகர சபைக்கு சொந்தமான வாகனங்கள் வேறு பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாயின், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களினதும் நிறுவனங்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களை வேறு தரப்புகளுக்கு வழங்கும் போது ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாயின் அது சம்பந்தமாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

276/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வறுமையை அளவிடுகின்ற பொருளாதார சுட்டெண்கள் யாவையென்பதையும்;

(ii) இதற்கு அமைவாக இன்றளவில் உள்ள வறிய மக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் வறுமை அடிப்படையில் முதல் 10 பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) இலங்கையில் மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களின் அடிப்படையில் வறுமை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) கடந்த 10 ஆண்டு காலத்தினுள் இலங்கையின் வறுமை பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

661/ ' 18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் அமைந்துள்ள,

(i) வன ஒதுக்கங்களின் அடர்த்தியும்;

(ii) வன ஒதுக்கங்களில் அமைந்துள்ள குளங்களின் எண்ணிக்கையும்;

(iii) மழைக் காடுகளும் அவற்றின் அடர்த்தியும்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தங்கள் அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டில்,

(i) சூழல் பாதுகாப்பு கருதி மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) சூழல் நேய தொழில்முயற்சிகளை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பல நகரங்கள் ஊடாக வழிந்தோடும் கழிவு நீர் ஆறுகளில் கலப்பதன் மூலம் பெருமளவில் நீர் மாசடைவதால் இவ்வாறு கழிவு நீர் நேரடியாக ஆறுகளில் கலப்பதைத் தடுக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

766/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் என்றழைக்கப்படுகின்ற வைய்ன் ஸ்ரோஸ்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி உரிமைப்பத்திரம் பெற்றுள்ளவர்களின் பெயர், முகவரி, உரிமப்பத்திர இலக்கம் மற்றும் முதலில் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது ஆண்டு மற்றும் மேற்படி வியாபார நிலையம் பேணிவரப்படுகின்ற இடம் என்பன தனித்தனியே யாது என்பதையும்;

(iii) செறிவின் விகிதத்திற்கு அமைய மற்றும் ஒவ்வொரு வர்த்தகப் பெயர்களுக்கு அமைய 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரை வருடாந்தம் வெளிநாட்டு மதுபானத்தின் உபயோகம் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

800/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டுக்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மீண்டெழும் செலவினமாக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கீட்டிலிருந்து நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு வெவ்றோக எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மேற்படி ஒதுக்கீடானது விகிதாசாரமாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

866/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரந்தன, விஹாரஹேன பிரதேசத்தில் பேணிவரப்படும் நீர் போத்தலில் அடைத்தல் தொழிற் முயற்சி காரணமாக பிரதேசத்தில் குடிநீர் மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இத்தொழில்முயற்சி ஆரம்பத்தில் 2003.12.16 ஆம் திகதி "ரபர் ப்ரடக்ட்ஸ்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு பேணிவரப்பட்டதுடன் 2017.06.30 ஆம் திகதி "விஹாரா நெச்சுரல் ப்ரடக்ட்ஸ்" எனும் பெயரில் குழாய் கிணற்றின் மூலம் நீரை பெற்று அதனை போத்தலில் அடைத்து விற்பனை செய்ப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) பிரதேச மக்களின் பாரியளவிலான எதிர்ப்புகளை கவனத்திற் கொண்டு இது சம்பந்தமாக நான் பல கடிதங்களை அனுப்பிய போதும் இற்றைவரை இதற்கான உரிய தீர்வு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) இது சம்பந்தமாக விசாரணையொன்றை நடாத்தி சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் நீர் மட்டம் வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

932/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், வழி இலக்கம் 595 ஊடாக பங்கொல்லாமடவில் இருந்து அக்குறணை, கண்டி வழியாக மஹரகம மற்றும் கொழும்பை வந்தடையும் வகையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்று நாள்தோறும் அதிகாலை 4.15 இற்கு சேவையில் ஈடுபட்டிருந்ததை அறிவாரா என்பதனையும்;

(ii) மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் உட்பட பொது மக்களது நலன் கருதி சேவையில் ஈடுபடுத்தியிருந்த அந்த பேருந்து சேவையை நிறுத்துவதற்கு கொள்கைரீதியான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த பேருந்து, சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இறுதித் திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி பேருந்து சேவையை வாரத்தின் அனைத்து நாட்களிலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

969/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டகல, சிறிபெரகும் வித்தியாலயத்திற்கு அருகே அமைந்திருந்த கோழிப்பண்ணை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்களின் எதிர்ப்புக் காரணமாக 2015 ஆம் ஆண்டு அகற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோழிப் பண்ணைக்குப் பதிலாக, தற்போது பாரியளவிலான மாட்டுத் தொழுவமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) மாட்டுத் தொழுவத்தை தாபிப்பதன் மூலம் அருகே அமைந்துள்ள சிறிபெரகும் வித்தியாலயத்தின் மாணவர்களின் சுகாதார நிலைமைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக் காரணமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மாட்டுத்தொழுவம் ஒன்றை நிர்மாணிப்பதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் கவனத்தில் கொண்டு இந்த மாட்டுத் தொழுவத்தை நிர்மாணிப்பதை நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

977/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் அத்தியாவசியமற்ற அலுவலர்கள் மிகையாகவும் அத்தியாவசிய அலுவலர்கள் பற்றாக்குறையாகவும் இருப்பதை அறிவாரா;

(ii) மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தி மக்களுக்கு மேலும் பயன்மிக்க சேவையை வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்கின்ற திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1003/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு மார்ச்சு 18 ஆம் திகதியன்று, கொழும்பு செங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்ற "நேர்மை திறன் மாநாடு" எனப்படும் அரச சேவையில் இலஞ்சத்தை ஒழிப்பதற்கான ஐந்தாண்டு திட்டத்தை வெளியிடுவதற்காக நடைபெற்ற விழாவை ஏற்பாடு செய்த நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அவ் விழாவுக்கு செலவான முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அவ் விழாவில் பங்கேற்ற அழைப்பு விருந்தினர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்கான செலவை ஏற்ற நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1023/ '19

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 ஆண்டுகளுக்குள்,

(i) மதுவரி சட்டத்தின் 58 "அ" பிரிவின் கீழ் மதுவரி அலுவலர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதற்கான நிதியத்திலிருந்து 818 அறிவித்தலை மீறி நிதிசார் முறைகேடுகளை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(ii) அவ்வறிவித்தலின்படி வருமானம் சேகரிக்கின்ற சீருடை அணிகின்ற பணியாட்டொகுதியினரின் 1200 பேருக்கும் வருமானம் சேகரிக்காத சீருடை அணியாத 150 பேருக்கும் வருடாந்தம் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும் அப்பணம் நிதியத்தின் எத்தனை வீதம் என்பதையும்;

(iii) அவ்வறிவித்தலின் (vi) இன் விசேட நிபந்தனைகளின் எல்லையை நெருங்காத சீருடை அணிகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 5.2 பிரிவினை மீறி, கடந்த 5 ஆண்டுக்குள் சட்டரீதியற்றவகையில் பணம் செலுத்த அங்கீகாரம் வழங்கியவர் யாரென்பதையும்;

(ii) 7.2-ii இல், உரிமை கோரக்கூடிய பணியாட்டொகுதியினருக்கு கடந்த 5 ஆண்டுக்குள் எத்தனை அளவை மீறிய வெகுமதி செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்; அது மொத்த வெகுமதி நிதியத்தின் வருமானத்தில் எத்தனை வீதம் என்பதையும்;

(iii) 77.2-ii இன் தரங்களுக்கு, உரித்தான பகுதியுடன் தொடர்புடைய பணத் தொகையைச் செலுத்தி, எஞ்சியதை 5.2 இன் கீழ் சட்டரீதியற்ற முறையில் வரவுவைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி சட்டவிரோதமான சமநிலையற்ற பணம் செலுத்தல் தொடர்பாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1029/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இல. 240 மூலம் கட்டட மற்றும் நிர்மாணத்துறையில் ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய மூன்று மாதங்களுக்கு இளைஞர்கள் 7500 பேர் வீதம் வருடமொன்றுக்கு 30,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) முப்பதாயிரம் வரையிலான பெருமளவு இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் யாவை என்பதையும்; அந்த ஒவ்வொரு நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1034/ '19

கௌரவ கனக ஹேரத்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான சீபோத் பிரிவில் அமைந்துள்ள சென்ட் கெத்தரின் தோட்டம் களனி கங்கையின் நீரேந்துப் பகுதி என்பதுடன் அது மரைகள், மான்கள் ஆகிய விலங்குகளின் வாழ்விடம் என்பதனையும்;

(ii) அது உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள பிரதேசம் என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த தோட்டத்தில் 50 ஏக்கர் காணியொன்றினை பிரித்து தனியார் ஒருவருக்கோ அல்லது குழுவொன்றிற்கோ வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும்;

(ii) அதற்கென காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினூடாக நிலஅளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அந்த நிலஅளவை நடவடிக்கைகள் அரசாங்க விடுமுறை நாட்களில் இரகசியமாக மேற்கொள்ளப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரதேசம் தொடர்பில் தனியார் துறையினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் சுற்றாடல் முக்கியத்துவம் காரணமாக மக்களது எதிர்ப்பின் காரணமாக நிராகரிக்கப்பட்டாலும், இந்த நிலைமையின் கீழ் அந்த பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட மாட்டாதா என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 29(2)(ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிரல் 11 ஆம் திகதிய 2118/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 14 ஆம் திகதிய 2123/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மாச்சு 5 ஆம் திகதிய 2113/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிறல் 04 ஆம் திகதிய 2117/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்,— பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ், 1988 யூன் 2 ஆம் திகதிய 508/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதி, உடனடியாக வலுப்பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒப்புதலுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 24 ஆம் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

சம்பளச் சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், தொழிற்சாலைகளைப் பதிவு செய்தலும் மற்றும் தொழிற்சாலைக் கட்டடங்களை அங்கீகரித்தலும் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், நீராவிக் கொதிகலன்களைப் பதிவு செய்தல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 34, 35, 36, 36அ, 38 மற்றும் 38அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், நீராவிக் கொதிகலன்கள் மற்றும் வேறு அழுத்தக் கலன்களை பரிசோதனை செய்வதற்கான சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 58அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், மிகையான இரைச்சலிலிருந்து வேலையாளர்களைப் பாதுகாத்தல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 13 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், பொது வெளிச்சமிடுதல் நியமம் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பாளர்களை பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 08 ஆம் திகதிய 2113/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53(2) மற்றும் 54(1)(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தகவற் செயலகம் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2019 ஆகஸ்ட் 22) [1].

* 17.

வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தபானம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்108 (1) உறுப்புரையின் பிரகாரம் கௌரவ உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செலுத்தும் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதோடு, 108(2) ஆம் உறுப்புரையின் மூலம் அந்த நீதிபதிகளை நியமித்த பின்னர் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைக் குறைக்கக்கூடாதென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 25 ஆம் பிரிவு திருத்தப்பட்ட இல 1190/18 ஆம் இலக்க, 2001.06.28 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90% ஐ ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைவர் ஆவாரென்பதனாலும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு தனது விருப்பத்தின் பேரில் அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்ற 24 மடங்கு தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், நீண்ட காலமாக இந்தப் பணிக்கொடை ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாமல் முழுமையான ஓய்வூதியத் தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிக்கொடையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் மீது அந்தப் பணிக்கொடையை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ளும் முறைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்து, முற்பணத் தொகையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிக்கொடையை 10 வருடங்களுக்குள் அதாவது, 120 மாதாந்த தவணைகளில் மீண்டும் அறவிட்டுக்கொள்வது அரசியலமைப்பின் 108(2) ஆம் உறுப்புரையை மீறியதாக அமையாதென்பதனாலும்;

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் ஓய்வூதியக் குறைப்பு அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மீது தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதை சட்டத்துறை தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாதலாலும்;

அவ்வாறே, அண்மையில் நீதிமன்றத் துறைக்கு உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

அதற்கிணங்க, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையை அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக 120 மாதங்களில் மீண்டும் அறவிடப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 20.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின் கீழ் 2019.04.26 ஆம் திகதியிலிருந்து திரு.டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அவரது சம்பளம் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதனாலும்;

தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு 2019.04.26 ஆம் திகதி முதல் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது படிமுறையில் அமர்த்தி சம்பளம் வழங்குவதற்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய வருடாந்த சம்பள ஏற்றத்தை செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 21.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 22.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 31.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 32.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 33.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 34.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 35.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 36.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 37.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 38.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017),— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 39.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 40.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 41.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 42.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 43.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 44.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 45.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 46.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 47.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2019.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 48.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 49.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 50.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 51.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 52.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 யூலை 27 ஆம் திகதிய 2133/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 53.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 54.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 55.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

56.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

64.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---